13.11.2025 O.S 167/2018 வா.சா1 ஞானபுஷ்பம்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் பாக பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகள் எனது மகள்கள் என்றால் சரிதான். பாக பிரிவினை வழக்கில் நான் என்ன சொல்லியுள்ளேன் என்பது பற்றியும், ஆவணங்கள் பற்றியும் எனக்கு தெரியும். 1,2 பிரதிவாதிகள் எதிர்கோரூரிமையில் என்ன வழக்கு சொல்லியுள்ளார்கள் என்று தெரியுமா என்றால் தெரியும். சொத்துரிமை அடிப்படையில் என் கணவர் குத்தாலிங்கம் உள்பட மற்ற பங்காளிகளுக்கு கூட்டு பட்டா எண்.3400 வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த பட்டா வா.சா.ஆ 3 என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களானது மூதாதையர் பாக்கியமுத்து என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த பாக்கியமுத்துவிற்கு 4 மகன்கள் என்றால் சரிதான். அதில் குத்தாலிங்கம் என்பவர் மனைவி ஞானமணி, மகன் பாக்கியமுத்து, சொர்ணம், பாப்பாத்தி ஆகியோர்களை விட்டு விட்டு 80 ஆண்டுகளுக்குமுன்பு இறந்து விட்டார் என்றால் சரிதான். சொர்ணமும், பாப்பாத்தியும் தனது சகோதரர் பாக்கியமுத்துவிற்கு அவர்களது பாகத்தை பொறுத்து விட்டு கொடுத்து விட்டார்கள் என்றால் சரிதான். பாக்கியமுத்து என்பவர் மனைவி தெய்வானையும், மகள் ஞானமணி, மகன் குத்தாலிங்கத்தை விட்டு விட்டு சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட்டார் என்றால் சரிதான். பாக்கியமுத்து மனைவி தெய்வானையும், மகள் ஞானமணியும் வழக்கு சொத்தில் உள்ள தங்களது பிரிவின்றி பாகத்தை மகன் குத்தாலிங்கத்திற்கு 1980 ம் ஆண்டு உரியமறுபயன் அடிப்படையில் வாய்மொழியாக விட்டு கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். தெய்வானை 2003 ம் ஆண்டு

இறந்து விட்டாரர் என்றால் சரிதான். குத்தாலிங்கம் என்பவர் வாதியான என்னையும், மகள்களான 1,2 பிரதிவாதிகளையும் விட்டுவிட்டு இறந்து விட்டார் என்றால் சரிதான். எனக்கும்., 1, 2 பிரதிவாதிகளுக்கும் வழக்கு சொத்து உள்பட எதிர்கோரூரிமையில் கோரியுள்ள 12 சொத்துக்களிலும் பாகம் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களை தவிர்த்து பாக்கியமுத்துவின் மற்ற சொத்துக்கள் பிரிக்கப்பட்டு விட்டதாக கூறுவது உண்மையில்லை என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகள் எதிர்கோரூரிமையில் 12 லக்க சொத்துக்கள் சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். அந்த 12 அயிட்ட சொத்துக்களில் 1 முதல் 9 சொத்துக்கள் 6.11.1932 தேதியிட் கிரைய ஆவணத்தின்படியும் 10,11 அயிட்ட சொத்துக்கள் 23.3.1926 ன்படியும், வழக்கு சொத்துக்களுடன் முதாதையர் பாக்கியமுத்து நாடாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அதில் என் கணவர் குத்தாலிங்கத்திற்கு 4 ல்1 பாகம் உள்ளது என்றால் சரிதான். என் கணவர்இறந்த பிறகு நானும், 1, 2 பிரதிவாதிகளும் சேர்ந்து அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். அதில் 3 ல் 1 பாகம் எனக்கும், 1,2 பிரதிவாதிகளுக்கும் தலா ஒரு பாகம் உள்ளது என்றால் சரிதான். எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள 12 லக்க சொத்து புல எண்.417 பாக்கியமுத்து நாடாரின் தாயார் பெரியாத்தாள் என்பவர் கடந்த 10.09.1927 அன்று 2 ஏக்கர் 90 செண்டில் அவரது 6 மகன்களுக்கு இடையே ஏற்பட்ட வாய்மொழி பாகத்தில் பாக்கியமுத்து நாடாருக்கு 6 ல்1 பாகமாக 48–1/4 செண்டு இடம் கிடைத்தது என்றால் சரிதான். மேலும் அதே புல எண் 417 ல் 23.3.1926 அன்று மேற்படி மூதாதையர் பாக்கியமுத்து 12 செண்ட் இடத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். ஆக மொத்தம் புல எண். 417 ல் 60–1/4 செண்ட் பாக்கியமுத்துவிற்கு பாத்தியப்பட்டது

என்றால் சரிதான்.புல எண். 417 ல் வழக்குரை பாரா 4 ல் பாக்கியமுத்துவின் 3 வது மகன் சுப்பையா என்பவர் தனது 4 ல்1 பாகத்தை விற்பனை செய்து விட்டார் என்றால் சரிதான். சுப்பையாவின் வாரிசுகளான 9 முதல் 13 பிரதிவாதிகளுக்கு எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள 12 லக்க சொத்தில் எவ்வித பாகமும் இல்லை என்றால் சரிதான். 12 ம்லக்க சொத்தில் வாதியாகிய எனக்கும், 1, 2 பிரதிவாதிகளுக்கும் எஞ்சிய 3 ல்1 பாகம் பாத்தியப்பட்டு அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். அந்த 3 ல்1 பாகத்தில் ஒரு பாகம் எனக்கும், மற்ற இரண்டு பாகங்கள் 1,2 பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்டது என்றால்சரிதான். எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள 12 லக்க சொத்துக்களில் 12 ம்அயிட்டம் நீங்கலாக 4 ல்1 பாகம் எனக்கும், 1,2 பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அதில் 3 ல்1 பாகம் எனக்கும், 3 ல்2 பாகம் 1,2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சொத்துக்கள் அனைத்தும் பலதலை முறைக்கு முன்பு பெறப்பட்டது என்றால் சரிதான். பாக்கியமுத்து மற்றும் அவரது தாயாரும் இந்து மதத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். நான் பட்டப்படிப்பு படித்துள்ளேன். தலைமுறை சொத்தில் ஒரு நபர் மதம் மாறினால் அவருக்கு சொத்தில் பாகம் கிடைக்காது என்றால் சரிதான். பாக்கியமுத்துவின் 4 வது மகன்கள் தான் 14 முதல் 16 பிரதிவாதிகள் என்றால் சரிதான். அவர்கள் அனைவரும் கிறிஸ்தவ மதத்திற்கு மாறியுள்ளார்கள் என்றால் சரிதான். அவர்கள் மதம் மாறியதால் சொத்தில் உரிமை கோரமுடியாது என்றால் சரிதான். அவ்வாறு மதம் மாறியதால் மற்ற பங்குதாரர்களுக்கு சொத்து பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த

பாகத்தில் எனக்கு ஒரு பாகமும், 1,2 பிரதிவாதிகளுக்கும் இரண்டு பாகமும் உள்ளது என்றால் சரிதான். பாக்கியமுத்துவின் 4 வது மகனுக்கு எவ்வித பாகமும் இல்லை என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகள் கோரியபடி பாகம் பிரிக்க எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான்.

(ஒம்)எஸ். முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.